மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
முன்னோடிப் பரீட்சை- 2021

தரம் 13 (2021) **கணக்கீடு 33-T-11** மூன்று மணித்தியாலம்

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

பகுதி II

முதலாம் இரண்டாம் வினா உட்பட மொத்தம் *5* வினாக்களுக்கு விடை தருக

வினா இல *01*

1) வரையறுக்கப்பட்ட கொரானா கம்பனியின் 31.3.2021 இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு

விபரம்	வரவு ரூ 000	செலவு ரூ 000
@ ரூபா 12 கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்		36000
பொதுஒதுக்கம்		15000
1.4.2020 இல் நிறுத்திவைத்தலாபம்		18000
விற்பனை		42000
கொள்வனவு	18000	
நிர்வாகச் செலவு	4500	
விநியோகச் செலவு	3600	
ஆரம்ப இருப்பு	160	
1.4.2020 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடு		500
1.4.2020 இறுதிக்காலண்டு வருமான வரி ஏற்பாடு		52
செலுத்திய வருமானவரி	280	
சென்மதி நிர்வாகச் செலவுகள்		110
வியாபார வருமதி	800	
வியாபார சென்மதி		500
1.4.2020 ஐயக்கடன் ஒதுக்கீடு		60
1.4.2020 இல் காணிமறுமதிப்பீட்டு மிகை		800
ஆதனம் பொறி உபகரணங்களின் முன்கொண்டுவரும் தொகை	54000	
12% வங்கிக் கடன்		2000
வங்கிக்கடன் வட்டி	200	
சொத்தசைவுக் கணக்கு		800
நீண்டகால வங்கி நிலையான வைப்பு	1000	
நிலையானவைப்பு வட்டி		120
குத்தகை பொறுப்பு	3000	
ஏனைய செலவு	120	
காசும் காசுக்கு சமனானவையும்	30282	
	115942	**115942**

மேலதிக தகவல்கள் :

1) 31.3.2021 இல் உள்ளபடியான இருப்பின் கிரய விபரம் வருமாறு.

இருப்பின் வகை	கிரயம் 000	தேறிய தேறத்தக்க பெறுமதி 000
M1	45	50
M2	75	70
M3	80	90
மொத்தம்	**200**	**210**

இருப்புக்கள் அலகுரீதியாக மதிப்பிடப்படுகின்றது.

2)1.4.2020 இல் ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான மீதிகள் வருமாறு.

சொத்துக்கள்	ஆயுட்காலம்	கிரயம்/மதிப்பிட்ட பெறுமதி ரூபா 000	தி.பெ.தே.ஒ ரூ 000	மு.கொ.பெ ரூ 000
காணி	-	15000	-	15000
கட்டிடம்	80	48000	18000	30000
மோட்டர் வாகனம்	10	10000	4000	6000
உபகரணம்	5	5000	2000	3000
		78000	(24000)	54000

ஆதனம் பொறி உபகரணம் தொடர்பில் இவ்வாண்டுக்கான தேய்வுகள் எவையும் இடம்பெறவில்லை.

3) மோட்டார் வாகனம் பொருள் விநியோகத்திற்கு பயன்படுவதுடன். ஏனைய சொத்துக்கள் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

4) காணி 31.3.2021 இல் ரூ 14000 000 பெறுமதியில் மதிப்பிடப்பட்டது. இவ்வாண்டுக்கான மறுமதிப்பீடு தொடர்பில் பதிவுகள் எவையும் ஏடுகளில் இடம்பெறவில்லை.

5) 1.4.2020 இல் கட்டிடத்தின் ஆயுட்காலம் மீள்மதிப்பிடப்பட்டது. இத்தினத்திலிருந்து இதன் எஞ்சிய ஆயுட்காலம் 40 ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டது.

6) 30.9.2017 இல் ரூ 4000 000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் 30.6.2020 இல் ரூ 2800 000 விலையில் காசுக்கு விற்கப்பட்டது. மேலும் புதிய மோட்டார் 1.10.2020 இல் ரூ 2000 000 காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது இதன் பயனுள்ள ஆயுட்காலம் 8 வருடங்கள் இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற காசும் செலுத்தப்பட்ட காசும் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்டு சொத்தசைவுக் கணக்கில் எதிர் பதிவுகள் செய்யப்பட்டதை தவிர வேறு பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

7. 31.3.2021 இல் வியாபார வருமதிகளில் 10% சமனாக எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிஒதுக்கத்தை சீராக்குக.

8. 19/20 நிதியாண்டின் இறுதிக் காலாண்டு வருமான வரிக்கு ரூ 50 000 இணங்கப்பட்டு செலுத்தப்பட்டதுடன். 20/21 நிதியாண்டின் இறுதிக் காலாண்டு வருமானவரிக்கு ரூ 40 000 மதிப்பிடப்பட்டது.

9. விற்பனை ஒரு வருட உத்தரவாத அடிப்படையில் செய்யப்படுகின்றது சென்றாண்டு உத்தரவாதம் தொடர்பில் இவ்வாண்டில் செலுத்தப்பட்ட ரூ 480 000 விநியோகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.3.2021 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடாக ரூ 520 000 ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

10. பொது ஒதுக்கீட்டிற்கு ரூ 200 000 மாற்றீடு செய்வதுடன். வருட இறுதியில் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் 50000 பங்குகள் நிறுத்திவைத்தலாத்தை பயன்டுத்தி மூலதனமாக்கப்பட்டது. வருட இறுதியில் இயக்குநர் சபையால் ரூ 5000 000 பங்குலாபம் பிரேரிக்கப்பட்டது.

11. கம்பனி 1.4.2020 இல் பொறி இயந்திரத்தை 4 வருட சொத்துப்பயன்படுத்தும் உரிமை அடிப்படையில் கொள்வனவு செய்தது. உடனடிக் கொடுப்பனவாக ரூ 1000 000 செலுத்தப்பட்டதுடன். வருடாந்தம் நிலையான தவணைக்கொடுப்பனவாக வட்டி உட்பட வருட இறுதியில் ரூ 2000 000 செலுத்தப்படும். குத்தகைவட்டி ஆண்டுக்கு 10% இவ்வாண்டில் குத்தகை தொடர்பில் இவ்வாண்டுக்கான தவணைக்கட்டணம், உடனடிக்கொடுப்பனவும் காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கிலிருந்து குத்தகை பொறுப்பில் கணக்கிற்கு வரவிடப்பட்டதை தவிர வேறு பதிவுகள் எவையும் இடம் பெறவில்லை. குத்தகை வட்டிக்குரிய இன்றைய பெறுமதிச் சுட்டிகள் வருமாறு.

வருடம்	0	1	2	3	4	5
10% கழிவிடல்	1.0	0.91	0.83	0.75	0.68	0.62

12. கம்பனியானது பொருட்களை விற்பனை செய்வதற்கும் 1 வருட பராமரிப்புச் சேவையை வழங்குதற்கு 1.1.2021 இல் வாடிக்கையாளருடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தது இந்த ஒப்பந்தத்தின் மொத்த ஒப்பந்த கைமாறு ரூ 1800 000 இதில் பொருளின் தனி விற்பனை விலை ரூ 1200 000 இரு பராமரிப்பு சேவை வருமானம் ரூ 800 000 1.1.2020 இல் கைமாற்றப்பட்டதுடன் பெறப்பட்ட மொத்த கைமாற்றுத் தொகை முழுவதும் விற்பனைக் கணக்கிற்கு செலவிடப்பட்டது.

வேண்டப்படுவது

LKAS 1 **இன்டிபடி பிரசுரிக்கத்தக்க வகையில் பின்வரும் நிதிக் கூற்றுக்கள்.**

1) **31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று**
2) **31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமை மாற்றக் கூற்று**
3) **31.3.2021 இல் உள்ளபடி நிதி நிலைமைக் கூற்று**

வினா இல 02

2) அ) **வரையறுத்த** கொவிட் கம்பனியானது P,Q என்ற இருவகையான பொருட்களை உற்பத்தி செய்கின்றது. அதன் தொழிற்சாலையானது பொருத்துதல், முடிவுறுத்தல் எனும் இரு உற்பத்தி திணைக்களத்தையும் சேவைத்திணைக்களமான களஞ்சியத்தையும் கொண்டுள்ளது. இவை மூன்றும் ஒரே இடத்தில் அமைந்துள்ளன மேலும் கம்பனியானது தனியான கட்டிடத்தில் அமைந்துள்ள நிர்வாகத்திணைக்களத்தையும் கொண்டுள்ளது. 5000 அலகு செயற்பாட்டு மட்டத்தில் அடுத்த வருடத்திற்கான பாதீட்டு மேந்தலைகள் வருமாறு.

விபரம்	மொத்தம் (000)	தொழிற்சாலை (000)	நிர்வாகத் திணைக்களம் (000)
நேரில் மூலப்பொருள்	800	800	-
முகாமையாளர் சம்பளம்	2400	?	?
கட்டிட வாடகை	360	?	?
ஊழியர் நலன்புரி செலவு	800	?	?
பொறிக்காப்புறுதி	1400	1400	-
மின்சாரம்	2000	?	?
ஏனைய மேந்தலை	740	?	140

மேலதிக தகவல்கள்

1) மேந்தலை பகிர்வு அடிப்படைகள்

விபரம்	**பொருத்துதல்**	**முடிவுறுத்தல்**	**களஞ்சியம்**
தளப்பரப்ப (சதுர அடி)	12000	8000	4000
கிலோவாற் மணி	800	600	200
ஊழியர் எண்	10	10	5
பொறியின் கிரயம்	4000 000	3000 000	-

2) மாதாந்தம் ரூ 50000 சம்பளத்தில் ஒவ்வொரு முகாமையாளரும் பணியாற்றுகின்றனர். தொழிற்சாலையில் 3 முகாமையாளரும் நிர்வாகப்பகுதியல் ஒருவருமாக பணியாற்றுகின்றனர். தொழிற்சாலையில் பணியாற்றும் முகாமையாளர்களில் இருவர் பொருத்துதல் பகுதியிலும் ஒருவர் முடிவுறுத்தல் பகுதியிலும் பணியாற்றுகின்றனர்.
3) தொழிற்சாலையில் 25 ஊழியரும் நிர்வாகத் திணைக்களத்தில் 15 ஊழியரும் பணியாற்றுகின்றனர்.
4) கம்பனி நிர்வாக திணைக்களத்திற்கு கட்டிடத்திற்கு வாடகையாக மாதாந்தம் ரூ 5000 செலுத்துகின்றது. இதன் வருடாந்த மின்சாரப்பாவனை 400 கிலோவாற் ஆகும்.
5) தொழிற்சாலை ஏனைய மேந்தலைகளை அனைத்து தொழிற்சாலை கிரய நிலையங்களுக்குமிடையே சமனாக பகிரப்படும்.
6) களஞ்சியத்தின் மொத்த மேந்தலை ஏனைய உற்பத்தி திணைக்களத்தறிற்கிடையே 3:2என மீள் பங்கீடு செய்யப்படும்
7) பொருத்துதல் திணைக்களத்தின் மேந்தலை இயந்திர மணி அடிப்படையில் உறிஞ்சப்படுகினறது முடிவுறுத்தலின் மேந்தலை ஊழியமணி அடிப்படையிலும் உறிஞகப்படுகின்றது.
8) நிர்வாகத் திணைக்களத்தின் மேந்தலைகள் அனைத்தும் நிலையான நிர்வாக மேந்தலைகள் என கருதுக. இவை P Q அகிய பொருட்களுக்கு சமனா பகிரப்படும்.
9) நேரில் மூலபபொருட்களில் ரூ 320 000 பொருத்துதல் திணைக்களத்திற்கும், ரூ 480 000 முடிவுறுத்தல் திணைக்களத்திற்கும் உரியது.
10) பாதிடப்பட்ட இயந்திர மணி , ஊழிய மணி வருமாறு

	பொருள் P	பொருள் Q
இயந்திர மணி	60000	40000
ஊழியமணி	30000	20000

11) பின்வரும் தகவல்கள் P, Q பொருளின் உற்பத்தியுடன் தொடர்புபடுகின்றது.

	P	Q
அலகொன்றை உற்பத்தி செய்வதற்கான உண்மையான மணி		
பொருத்துதல் (இயந்திர மணி)	03	02
முடிவுறுத்தல் (ஊழியமணி)	02	04
அலகு மூலக் கிரயம்	360	260
விற்பனை விலையில் இலாப எல்லை	25%	20%
உற்பத்தி அலகுகள்	*2500*	*2500*

வேண்டப்படுவது:

1) மேந்தலை பகிர்வு அட்டவனை
2) மேந்தலை உறிஞ்சல் ஒவ்வொரு உற்பத்தி திணைக்களத்திற்கும் விகிதம்
3) மொத்த நிர்வாக மேந்தலை
4) உற்பத்திபொருள் P. Q அலகொன்றின் உற்பத்தி கிரயம்
4) உற்பத்தி பொருள் P Q யின் அலகொன்றின் விற்பனை விலை

(25 புள்ளிகள்)

ஆ) சினோபாம் உற்பத்தி வணிக நிறுவனத்தின் உற்பத்தி தொழிலாளர் உற்பத்தி முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர் என 3 ஊழியர்கள் காணப்படுகின்றனர் இவர்களது 2021 ஜனவரி மாத கூலி தொடர்பான தகவல்கள் வருமாறு

விபரம்	*உற்பத்தி தொழிலாளர் (அமலன்)*	*உற்பத்தி முகாமையாளர் (விமலன்)*	*நிர்வாக முகாமையாளர் (கபிலன்)*
அடிப்படைச் சம்பளம்	*?*	*?*	*?*
பிரயானப்படி	-	*5000*	*5000*
ஊக்குவிப்பு கொடுப்பனவு	*4000*	-	-
கழிப்பனவுகள்			
ஊழியர் நலன்புரி நிதி	*4000*	*3000*	*1000*
ஊழி.சேம.நிதி (EPF)	*10%*	*10%*	*10%*
தேறிய சம்பளம்	*27000*	*20000*	*22000*
தோழில் கொள்வோன் (EPF)	*15%*	*15%*	*15%*

ஊழியர் சேமலாபநிதி அவர்களது (EPF) அவர்களது அடிப்படைச்சம்பளத்தில் கணிக்கப்படுகின்றது. உற்பத்தி தொழிலாளர் உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புபடுகின்றார்.

1) 2021 ஜனவரி மாத சம்பளப்பட்டியல்
2) மூலக் கிரயத்தில் உள்ளடக்கப்படும் ஊழியர் தொடப்பான மொத்தச் செலவு யாது?
3) உற்பத்தி மேந்தலைக் கிரயத்தில் உள்ளடக்கப்படும் ஊழியர் தொடப்பான மொத்தச் செலவு யாது?
4) நிர்வாகச் செலவில் உள்ளடக்கப்படும் ஊழியர் தொடப்பான மொத்தச் செலவு யாது?

(15 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 40)

வினா இல 03

காகிதாதிகளை விற்பனை செய்யும் மொடோனா நிறுவனத்தின் 1.1.2021 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்று வருமாறு

விபரம்	தொகை	தொகை	தொகை
நடைமுறையல்லாச் சொத்து			
ஆதனம்பொறி உபகரணம்	400000	(80000)	320000
நடைமுறைச்சொத்து			
காகிதாதி கையிருப்பு		60000	
கடன்பட்டோர்		40000	
முற்கொடுப்பனவும் முற்பணச் செலவும்		22000	
காசு		128000	250000
			570000
உரிமையாண்மை			
மூலதனம்		300000	
நிறுத்திவைத்தலாபம்		160000	460000
நடைமுறையல்லாப்பொறுப்பு			
6% வங்கிக்கடன்			50000
நடைமுறைப்பொறுப்பு			
கடன்கொடுநர்		40000	
முற்பணமாகப் பெற்றது		15000	
சென்மதி சம்பளம்		5000	60000
			570000

2021 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள வருமாறு

2.1 ரூ 40000 காகிதாதிகள் கொள்வனவு செய்யப்பட்டது. இதில் 20 000 *சென்றமாதம் செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து கழிக்ப்பட்டு மிகுதி இம்மாதம் செலுத்தப்பட்டது.*

4.1 ரூ 60000 கிரயமான காகிதாதிகள் ரூ 100000 பட்டியல் விலையில் கடனுக்கு விற்கப்பட்டது. வியாபாரக்கழிவு 20%

6.1 கடன்பட்டோனால் உட்திரும்பியது ரூ 12000 (இவை 4.1 இல் விற்கப்பட்டது)

9.1 காசாகப் பெற்றவாடகை ரூ 10000

11.1 ஜனவரி மாத வாடகை ரூ 3000 இதில் ரூ 2000 சென்றமாதம் செலுத்தப்பட்டிருந்தது. மிகுதி இம்மாதம் செலுத்தப்பட்டது.

13.1 25000 கிரயமான காகிதாதிகள் ரூ 40000 இற்கு விற்கப்பட்டது. இதற்காக ரூ 15000 சென்றமாதம் பெறப்பட்டதுடன் மிகுதி இம்மாதம் பெறப்பட்டது.

15.1. இல் மோட்டார் ரூ 100 000 வங்கிக்கடன் மூலம் பெறப்பட்டது.

18.1 பாடசாலை மாணவர்களுக்கு ரூ 5000 கிரயமான காகிதாதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

20.1 முன்னைய மாதத்தில் பதிவளிக்கப்பட்ட ரூ 10000 வியாபார வருமதி இம்மாதம் பெறப்பட்டது

22.1 சென்ற மாத சென்மதி சம்பளம் முழுவதும் செலுத்தப்பட்டதுடன் இம்மாதத்திற்குரிய சென்மதி சம்பளம் ரூ 5000

23.1 ரூ 8000 கடன்பட்டோருக்கு பதிலாக அவருக்கு செலுத்தவேண்டிய ரூ 6000 கழிக்கப்பட்டு மிகுதி காசு பெறப்பட்டது.

25.1 வணிகத்தின் விளம்பரச் செலவு ரூ 6000 உரிமையாளரின் தனிப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்பட்டது.

27.1 இம்மாதம் அழிவடைந்த காகிதாதிகள் ரூ 15000 இதில் ரூ 12000 காப்புறுதி நிறுவனம் நட்டஈடாக தரமுன்வந்தது.

30.1 ஆதனம்பொறி உபகரணத்திற்கு பெறுமானத் தேய்வுக்கு ஆண்டுக்கு 12% தேய்விடுக.

31.1 இம்மாத வங்கிக்கடன் வட்டி சென்மதியாகவுள்ளது.

வேண்டப்படுவது

1) 1.5 உள்ள மீதி உட்பட 15 கொடுக்கல்வாங்கல்களையும் கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செய்து காட்டுக

   ஆதனம்பொறி + இருப்பு + வியாபாரவருமதி + ஏனைய வருமதி + காசு = மூலதனம் + வியாபார சென்மதி + ஏனைய சென்மதி + வங்கிக்கடன் + நிறுத்திவைத்தலாபம் (ஏனைய வருமதி முற்கொடுப்பனவுகளையும், வருமதி வருமானங்களையும் உள்ளடக்கியதுடன்) (ஏனைய சென்மதி முற்பண வருமானங்களையும், சென்மதி செலவினங்களையும் உள்ளடக்கியது)
2) 2021 ஜனவரி மாதத்திற்கான வருமானக்கூற்று
3) 31.1.2021 இல் நிதி நிலைமைக் கூற்று

(40 புள்ளிகள்)

வினா இல 04

அ) சுருதி விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் 31.3 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்றுகள் வருமாறு

	31.3.2021	1.4.2020
ஆதனம்பொறி உபகரணம் முன்கொண்டுசெல்லும் பெறுமதி	448000	200000
புத்தக சாலை இருப்பு	36000	40000
வருமதி சந்தா	5000	3000
புத்தகசாலை கடன்படுநர்	30000	40000
காசு	269000	230000
	788000	**513000**
திரண்ட நிதி	562 000	250 000
கழகக்கட்டிட நிதி	150 000	200 000
ஆயுள் அங்கத்தவ நிதி	20 000	32 000
விளையாட்டு உபகரண நிதி	20 000	-
புத்தகசாலை கடன்கொடுநர்	32 000	26 000
முற்பண சந்தா	2 000	4 000
நின்ற மின்சாரம்	2 000	1 000
	788000	513000

31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான காசுகொடுக்கல்வாங்கல் வருமாறு

பெற்ற சந்தா	ரூ *48000*
புத்தகசாலை கடன்பட்டோரிடம் பெற்றது	ரூ *120000*
புத்தகசாலை கடன்கொடுநருக்கு செலுத்தியது	ரூ *92000*
மின்சார கொடுப்பனவு	ரூ *7000*
விளையாட்டு உபகரண நிதிக்கு பெற்றது	*?*
கட்டிட நிதிக்கு பெற்றது	*?*

மேலதிக தகவல்

1) இவ்வாணடு பெறுமானத்தேய்வு *12000* பெறுமானத்தேய்வில் ½ பகுதி புத்தகசாலைக்குரியது.
2) ஆண்டு காலத்தில் விளையாட்டு உபகரணத்திற்கு ஒரு பகுதி நன்கொடை காசாக பெறப்பட்டது ஆண்டு காலத்தில் கொள்வனவு செய்யபட்ட விளையாட்டு உபகரணம் முழுவதும் விளையாட்டு உபகரண நிதியை பயன்படுத்தியே பெறப்பட்டது.
3) பெறப்பட்ட நன்கொடைகள் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் வருமானமாக கருதுவது கழகத்தின் கொள்கையாகும்.
4) மின்சாரத்தில் ¼ பகுதி புத்தகசாலைக்குரியது.
5) கட்டிட நிதியை பயன்படுத்தி ரூ *200000* பெறமதியான கட்டிடம் இவ்வாண்டு கட்டிமுடிக்கப்பட்டது.
6) புத்தகசாலை கடன்பட்டோனுக்கு ஆண்டு காலத்தில் ரூ *3000* கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் கடன்கொடுநரிடம் ரூ *5000* கழிவு பெறப்பட்டது.

வேண்டப்படுவது **1) புத்தகசாலை வருமானக்கூற்று**
2) கழகத்தின் வருமானக் கூற்று
3) கொள்ளல் கொடுத்தல் கணக்கு

(20 புள்ளிகள்*)*

ஆ) ஒரு பங்குடைமையில் கவியும், புவியும் இலாபநட்டங்களை *3:2* என பகிரும் பங்காளர்கள் ஆவார். *1.4.2020* இல் ரவி பங்காளராக அனுமதிக்கப்பட்டார் அவர் தமது மூலதனத்திற்கும் நன்மதிப்புக்கு தனது பங்கையும் காசாக ரூ *1900 000* கொண்டுவந்தார் இத்தினத்தில் நிறுவனத்தில் உள்ள நன்மதிபபு பங்காளர் மூலதன கணக்கினூடாக சீராக்கப்பட்டது. புதிய பங்குடைமை உடன்படிக்கைக்கு அமைய பங்காளர் மூலதன மீதிக்கு ஆண்டுக்கு *10%* வட்டி வழங்கப்பட வேண்டியதுடன் புவிக்கும் ரவிக்கும் ஆண்டுச் சம்பளமாக முறையே ரூ *300 000, 200 000* வழங்கப்படல் வேண்டும். புதிய இலாபநட்டம் முறையே *5:3:2*
வருட ஆரம்பத்திலும், இறுதியிலும் காணப்படும் பங்காளர் மூலதன நடைமுறை கணக்கு மீதிகள் வருமாறு

		31.3.2021 ரூபா *000*	*31.3.2020* ரூபா *000*
மூலதனம் -	கவி	*4100*	*4050*
-	புவி	*3100*	*3050*
-	ரவி	*1800*	-

பங்காளர் நடைமுறை	கவி ?	600
	புவி ?	400
	ரவி ?	-

கவியும், புவியும் ஆண்டுகாலத்தில் முறையே ரூ 200 000, 100. 000 காசக பற்யிருந்தனர்.

மேலதிக தகவல்கள்

பின்வரும் விடயங்கள் சீராக்கத்திற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

1) 15 மாதங்களுக்கு செலுத்திய காப்புறுதி ரூ 150 000 முழுவதும் காப்புறுதி கணக்கிற்கு வரவிடப்பட்டது.
2) ரவியால் ஆண்டு காலத்தில் பற்றிய ரூ 50 000 பண்டங்கள் தொடர்பில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.
3) பங்குடைமையில் உள்ள ரவியால் பங்குடைமைக்காக செலுத்திய ரூ 200 000 வாடகை தொடர்பில் பதிவுகள் இடம்பெறவில்லை
4) 1.10.2020 10% வட்டிக்கு கவியிடமிருந்து பெறப்பட்ட ரூ 400 000 கடன் தொடர்பில் பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை
5) பங்காளர்கள் ஒவ்வொருவரும் தமது ½ ஆண்டு சம்பளத்தை காசாக எடுத்திருந்தனர் இவை காசுக்கட்டுப்பாட்டு கணக்கிலிருந்து பங்குடைமையின் சம்பளக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
6) 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சீராக்கமுன் இலாபம் ரூ 2190 000

வேண்டப்படுவது

1) 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபச் சீராக்க கூற்று
2) 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பகிர் கணக்கு
3) 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மூலதன, நடைமுறை கணக்கு

(20 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல 05

அ) வரையறுத்த பைசர் கம்பனியின் 31.3.2021, 31.3.2020 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்று வருமாறு

	31.3.2021 ரூபா 000	31.3.2020 ரூபா 000
ஆதனம்பொறி உபகரணம் (மு.கொ.வ.பெ)	1900	2500
இருப்பு	240	320
கடன்பட்டோர் (முன்கொடுவரும் தொகை)	360	270
முற்பணவட்டி	20	50
காசு	4420	2190
	6940	**5330**
ஓவ் ரூ 12 கூறப்பட்டமூலதனம்	3600	2400
காணி மறுமதிப்பீட்டு ஒதுக்கம்	-	300
நிறுத்திவைத்த வருவாய்	1600	1100
பொது ஒதுக்கம்	600	500
10% நீண்டகாலக்கடன்	800	600
கடன்கொடுநர்	240	280
வரி ஏற்பாடு	100	150
	6940	**5330**

மேலதிக தகவல்

1. 1.10.20218 இல் 400 000 கொள்வனவு செய்யப்பட்ட பொறி ரூ 30.9.2020 இல் ரூ 50 000 இலபத்தில் விற்கப்பட்டது. பொறிக்கு ஆண்டுக்கு 10% தேய்விடப்பட்டது. ஆண்டு காலத்தில் மோட்டார் ஒன்று ரூ 200 000 காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
2. ஆண்டில் 25000 பங்குகள் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் நிறுத்திவைத்தலாபத்தை மூலதனமாக்கியுள்ளது.
3. கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுவது வழக்கம்
4. நிதியாண்டில் பெறப்பட்ட வங்கிக்கடன் 31.3.2021 பெறப்பட்டதாகும்
5. நிதியாண்டில் பங்குலாபம் செலுத்தப்பட்டது
6. ஆதனம்பொறி உபகரணம் கொள்வனவுகளும் விற்பனையும் காசுக்கு இடம்பெற்றது
7. காணி இவ்வாண்டு ரூ 400 000 குறைத்து மீள்மதிப்பிடப்பட்டது.
8. இவ்வாண்டுக்கான வருமானவரி ரூ 120 000
9. இவ்வாண்டுக்கான வரிக்கு முன் தேறியலாபம் ரூ 1200 000
10. இவ்வாண்டுக்கான கடன்விற்பனை ரூ 3500 000

வேண்டப்படுவது

அ) 31.3.2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(30 புள்ளிகள்)

ஆ) 31.3.2021 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பின்வரு கணக்கீட்டு விகிதங்கள்

அ) உரிமை முதல் மீதான திரும்பல் வீதம்
ஆ) வட்டிக்காப்பு விகிதம்
இ) கடன் உரிமையாண்மை விகிதம்
ஈ) கடன்பட்டோர் புரள்வு விகிதம்
உ) பங்கொன்றிற்கான உழைப்பு விகிதம்

(10 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா இல 06

அ) வடமாகாண கல்வித்திணைக்களம் 2021 க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு கணக்கீட்டு பாட 3 நாள் செயலமர்வை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது இதன்போது மாணவர்களுக்கு கையேடு சிற்றுண்டிப்பொதி ஒன்றையும் வழங்க ஒழுங்கு செய்யது இதற்காக யாழ்மாவாட்ட வர்த்தக சங்கம் மாணவர் ஒருவருக்கு 1600 வீதம் திணைக்களத்திற்கு வழங்க தீமானித்தது. இதனுடன் தொடர்புடைய செலவுகள்

முழுப்பாடப் பரப்பையும் உள்ளடக்கிய கையேடு ஒன்றை அச்சிடும் செலவு ரூ 600
கையேட்டை தட்டச்சு செய்யும் செலவு பக்கமொன்றிற்கு ரூ 40
(கையேடு 300 பக்கங்களை கொண்டது)
ஒரு வளவாளருக்கான கொடுப்பனவு நாளொன்றிற்கு ரூ 3000
(நாளொன்றில் 2 வளவாளர் தொழிற்படுவர்)
தேர்ச்சி ஒன்றை எழுவுதற்கான செலவு ரூ 1000
(கையேடு 16 தேர்ச்சிகளை கொண்டது)
கையேட்டை செவ்வைபார்த்தல் செலவு ரூ 4000
மாணவர் ஒருவருக்கான நாளொன்றிற்கான சிற்றுண்டி பொதி ரூ 200
மாணவர் ஒருவருக்கான நாளொன்றிற்கான முகக்கவசம் கையுறை செலவு ரூ 50

வேண்டப்படுவது

1) மொத்த நிலையான செலவு யாது?
2) மாணவர் ஒருவருக்கான பங்களிப்பு யாது?
3) மொத்தச் செலவை ஈடுசெய்வதற்கு
அ) கலந்துகொள்ள வேண்டிய மாணவர் எண்ணிக்கை யாது?
ஆ) வர்த்தக சங்கத்திடம் பெறவேண்டிய நிதி யாது ?
4) கல்வித் திணைக்களம் ரூ 25000 மிகையை அடையுமாயின் கலந்துகொண்ட மாணவர் எண்ணிக்கை யாது?
5) 400 மாணவர்கள் கலந்துகொண்டவர்கள் என கருதி இதில் 100 மாணவர்களுக்கு மூன்றாம்நாள் சிற்றுண்டி பொதியும் முகக்கவசமும் வழங்கவில்லையாயின் கல்வித்திணைக்களத்திற்று உண்டான மிகை யாது?

(20 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த டொனாபாம் பொதுக்கம்பனி தனது செயற்பாட்டை விரிவுபடுத்த எண்ணியது பழைய இயந்திரத்திற்கு பதிலாக புதிய இயந்திரத்தை பயன்படுத்தவுள்ளது அதன் பழைய உபகரணத்தை அதன் புத்தக விலையான ரூ 450 000 இற்கு விற்பனை செய்யமுடியும்.

புதிய இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட காசு உட்பாச்சல் வெளிப்பாய்ச்சல் விபரங்கள் வருமாறு

விபரம்	*ரூ 000*
இயந்திர கொள்விலை	*2200*
இயந்திரத்தின் உட்சுமைகூலி	*250*
இயந்திரத்தின் நிறுவுதற் கிரயம்	*200*
பயன்தரு காலமுடிவில் எஞ்சிய பெறுமதி	*150*
செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் தொழிற்படு மூலதன தேவைப்பாடு ...	*200*

மேலதிக தொழிற்படு மூலதனம் வருட இறுதியில் மீளப்பெறப்படும் புதிய இயந்திரத்தின் எதிர்பார்க்கும் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடம் புதிய இயந்திரத்தை கொள்வனவு செய்யுமாயின் கம்பனியின் வரிக்கு பின்னரான இலாபத்தில் வருடாந்த அதிகரிப்பானது ரூ 300 000 இருக்குமென மதிப்பிடப்படுகின்றது. இச் செயற்திட்டத்தின் தேவைப்படும் திரும்பல் வீதமானது 10% ஆகும் இதன் கழிவடல் காரணி.

வருடம்	*1*	*2*	*3*	*4*	*5*
கழிவடல் காரணி	*0.91*	*0.83*	*0.75*	*0.68*	*0.62*

வேண்டப்படுவது

1) செயற்திட்டத்தின் திரும்பல்காலம் யாது?
2) சராசரி முதலீட்டு திரும்பல் வீதம் யாது?
3) செயற்திட்டத்தின் ஒவ்வொரு வருடத்திற்குமான காசு உட்பாச்சல் வெளிப்பாய்ச்சல் அட்டவனை
4) செயற்திட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி(NPV)
5) தேறிய நிகழ்காலப் பெறுமதி(NPV) அடிப்படையில் புதிய இயந்திரத்தை கொள்வதற்கான சிபாரிசு யாது?

(20 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)